# திருவரங்க பெருமாள் அரையர்
# வாழி திருநாமம்

நாதமுனி குலம் திகழ நன்குதித்தோன் வாழியே
நற்றமிழின் மறைக்கிசையை நவின்றுரைப்போன் வாழியே
காதல் அரங்கேசர் இரு கழல் பணிவோன் வாழியே
கானவர நயவிசையால் களிப்பிப்போன் வாழியே
ஏதமில் வண்கச்சியினை ஏத்திசைப்போன் வாழியே
எதிபதியைப் பரிசாக ஏற்று வந்தோன் வாழியே
தீதில் யமுனைத்துறைவன் சேவடியோன் வாழியே
திருவரங்கப் பெருமாள் அரையர் திருவடிகள் வாழியே

---